**சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை**
**பிறப்பிப்பவர் : திரு.செ.கார்மேகம், இ.ஆ.ப.**

**ந.க.எண்:2222/2021/பே2**

நாள்: .06.2021

**பொருள்:** பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – சேலம் மாவட்டம் – 20 சதவீதம் ஒதுக்கீட்டின்படி இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியிடங்களில் பணிமாறுதல் மூலம் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்கள் – இளநிலை உதவியாளர் / வரித்தண்டலராக பணியில் இணைந்த நாள் முதல் பணியினை வரன்முறை செய்து ஆணைபிறப்பித்தல் – தொடர்பாக.

பார்வை

1. அரசாணை எண்.271, ஊரக வளர்சித் துறை, நாள். 04.04.1990
2. அரசாணை (நிலை) எண்.26 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(பேரூ1) துறை, நாள்.19.02.2020.
3. சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 1203/2007/பே2, நாள். 12.03.2020.
4. தொடர்புடைய பேரூராட்சி செயல் அலுவலர்களால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்.
5. தொடர்புடைய ஆவணங்கள்

------

**ஆணை:**

சேலம் மாவட்ட பேரூராட்சிகளில் பணிபுரிந்து வரும் கீழ்காணும் அட்டவணையில் கண்டுள்ள பணியாளர்களுக்கு 2006–2007 முதல் 2016–2017 வரை ஏற்பட்ட காலிபணியிடங்களில் 20% ஒதுக்கீட்டின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வரம்பிற்குட்பட்ட தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதியின் இளநிலை உதவியாளர்/ வரித்தண்டலர் பணியிளடங்களில் பணிமாறுதல் மூலம் பணிநியமனம் செய்து பார்வை(2)ல் காணும் விபரப்படி அரசாணை வெளியிடப்பட்டது.

அதனை தொடர்ந்து பார்வை(3)ல் காணும் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகளில், பணிமாறுதலில் இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர்களாக பணிநியமனம் செய்யப்பட்ட 8 (எட்டு) பணியாளர்களுக்கு பணியிடம் ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டதன் பேரில் அவரவர் பெயருக்கு எதிரே குறிப்பிட்டுள்ளவாறு பணிநியமனம் செய்யப்பட்டுள்ள பேரூராட்சிகளில் பணியேற்பு செய்து பணிபுரிந்து வருகின்றனர்.

2...

| வ. எண் | பணியாளர்களின் பெயர் (திருவாளர்கள்) | பதவி மற்றும் பணி நியமனம் செய்யப்பட்ட பேரூராட்சியின் பெயர் | பணியில் இணைந்த நாள் | பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | பெ.கனகராஜ், | வரித்தண்டலர், மல்லூர் பேரூராட்சி | 13.03.2020 மு.ப | 13.03.2020 மு.ப |
| 2 | பெ.மோகன்ராஜ் | வரித்தண்டலர், தாரமங்கலம் பேரூராட்சி | 13.03.2020 பி.ப | 13.03.2020 பி.ப |
| 3 | கா.ஸ்ரீதரன் | வரித்தண்டலர், பனமரத்துப்பட்டி பேரூராட்சி | 24.03.2020 பி.ப | 24.03.2020பி.ப |
| 4 | பி.பழனியம்மாள் | வரித்தண்டலர், அரசிராமணி பேரூராட்சி | 13.03.2020 பி.ப | 13.03.2020 பி.ப |
| 5 | எஸ்.ராஜேந்திரன் | வரித்தண்டலர், ஆட்டையாம்பட்டி பேரூராட்சி | 13.03.2020 மு.ப | 13.03.2020 மு.ப |
| 6 | எஸ்.தங்கவேல் | இளநிலை உதவியாளர் , கொங்கணாபுரம் பேரூராட்சி | 13.03.2020 மு.ப | 13.03.2020 மு.ப |
| 7 | சு.பொன்னா | இளநிலை உதவியாளர் , கெங்கவல்லி பேரூராட்சி | 13.03.2020 மு.ப | 13.03.2020 மு.ப |
| 8 | சி.பாரதி | வரித்தண்டலர், பி.என்.பட்டி பேரூராட்சி | 13.03.2020 மு.ப | 13.03.2020 மு.ப |

மேற்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி, இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர்கள் பணியிடங்களில் பணிபுரிந்து வரும் பணியாளர்களின் பணியினை அவரவர் பணியில் இணைந்த நாள் முதல் பணிவரன்முறை (Service Regularisation) செய்து இதன் வழி ஆணையிடப்படுகிறது.

மேலும், மேற்குறிப்பிட்டுள்ள பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்யப்பட்டதற்கான பதிவுகளை சம்மந்தப்பட்ட பணியாளர்களின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ள தொடர்புடைய செயல் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

கோ. [illegible] 30/6/2021

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக,
சேலம்.

பெறுநர்
சம்மந்தப்பட்ட பணியாளர்கள் 30/6/21 30/6/21
(மேற்காணும் அட்டவணையில் கண்டுள்ளவாறு),
சேலம் மாவட்டம். (செயல் அலுவலர் வாயிலாக)

நகல்:சென்னை பேரூராட்சிகளின் ஆணையர் அவர்களுக்கு தவலுவலக்காக அனுப்பப்படுகிறது.

நகல்:செயல் அலுவலர்கள், மல்லூர், தாரமங்கலம், பனமரத்துப்பட்டி, அரசிராமணி, ஆட்டையாம்பட்டி, கொங்கணாபுரம், கெங்கவல்லி மற்றும் பி.என்.பட்டி பேரூராட்சி, சேலம் மாவட்டம்.

நகல்:இருப்புக் கோப்பு.

\\Adtp2\D\B\TP-II-2021\Regularasation\2222-2021.Docx